| **M/s Sri Anuubhavi Impex** (Borrower), **Mr. Ramasamy Muruganatham** (Guarantor / Partner / Mortgagor) and **Mrs. Dhavamani Devi** (Partner / Guarantor) and **Ms. Jency Divine Nimafaa** (Partner / Guarantor) | **Rs. 4,94,06,340.50** (Rupees Four Crore Ninety-Four Lakh Six Thousand Three Hundred Forty and Paisa Fifty Only) | **Item No.I:** All that piece and parcel of Vacant Land bearing in Morattupalayam, Tiruppur, Land Measuring an extent of 13.84 Cents, Comprised in Survey No. 85/1A1(Presently Subdivided as Survey No. 85/1A1C), situated at Morattupalayam Village, Tiruppur North Taluk, Tiruppur District **Bounded on the** North by: R. S. No. 85/1A1 belongs to Mr. Ponnusamy, South by: Item No. III R.S. No. 85/2A East by : Item No. I R.S. No. 85/1B, West by : R.S. No. 85/1A1 belongs to Mr. Ponnusamy.<br>**Item No.II :** All that piece and parcel of Vacant Land bearing in Morattupalayam, Tiruppur, Land Measuring an extent of 44 Cents, Comprised in Survey No. 85/1B(Presently Subdivided as Survey No. 85/1B1), situated at Morattupalayam Village, Tiruppur North Taluk, Tiruppur District **Bounded on the** North by: R. S. No. 85/1B belongs to Mr. Ponnusamy, South by: Item No. III R.S. No. 85/2A East by : 30 Feet Wide South North Common Pathway, West by : Item No. I.<br>**Item No.III:** All that piece and parcel of Vacant Land bearing in Morattupalayam, Tiruppur, Land Measuring an extent of 1 Acre 43 Cents, Comprised in Survey No. 85/2A, situated at Morattupalayam Village, Tiruppur North Taluk, Tiruppur District **Bounded on the** North by: R. S. No. 85/1A1, R. S. No. 85/1B. South by: R.S. No. 85/2B, R.S. No. 86, R.S. No. 85/2C, East by : 30 Feet Wide South North Common Pathway West by : R. S. No. 88. Situated within the Sub-Registration District of Uthukuli and Registration District of Tiruppur. | **26.09.2026** | **On 28.09.2026** Between 11.00 A.M. To 1.00 P.M. (Unlimited extension of 10 minutes each) | **Rs. 1,67,00,000/-** (Rupees One Crore Sixty Seven Lakh Only) | **Rs. 16,70,000/-** (Rupees Sixteen Lakh Seventy Thousand Only) |

**TERMS AND CONDITIONS OF E-AUCTION SALE**

1. The property shall not be sold below the Reserve Price and sale is subject to the confirmation by Unity Small Finance Bank Limited as secured creditor. The property shall be sold strictly on **"AS IS WHERE IS" and "AS IS WHAT IS" and "NO RECOURSE BASIS".**
2. E-auction will be conducted "online" through Bank's approved service provider M/s. ARCA EMART PVT LTD at the web Portal **www.auctionbazaar.com.**
3. Bidders shall hold a valid email ID {e-mail id is necessary for the intending bidder as all the relevant information and allotment of ID & Password by M/s ARCA EMART PVT LTD (Auctionbazaar.com) may be conveyed through email}.
4. The prospective qualified bidders may avail of online training on e-auction from M/s ARCA EMART PVT LTD, 7-1-28/1/A/1, Park Avenue 1, Ameerpet, Secunderabad, Telangana 500016. Website at **www.auctionbazaar.com,** help line no. 8370969696, Email ID **contact@auctionbazaar.com, support@auctionbazaar.com.** Prior to the date of e-auction neither the Authorised Officer / Bank nor M/s ARCA EMART PVT LTD (Auctionbazaar.com) will be held responsible for any internet network problem / power failure/ any other technical lapses/failure etc. toward off such contingent situations the interested bidders are requested to ensure that they are technically well equipped with adequate power back-up etc. for successfully participating in the e-auction event.
5. Earnest Money Deposit **(EMD)** shall be deposited through **RTGS/NEFT** fund transfer to **Current Account No. - 026881300002012, Name of the Bank: Yes Bank Limited, Branch: Bandra, Mumbai, Name of the Beneficiary: Unity Small Finance Bank Limited, IFSC Code: YESB0000268.**
6. The Bids below reserve price and/or without EMD amount shall not be accepted. Bidders may improve their further bid amount in multiple of Rs. 1,00,000/- (Rupees One Lakh Only).
7. The successful bidder shall pay 25% of the bid amount/sale price (including earnest money already paid) immediately after declaration of successful bidder. The successful bidder will deposit balance 75% of the bid amount/sale price within 15 days from declaration of successful bidder, subject to TDS as may be applicable.
8. If successful bidder fails to deposit sale price as stated above, all deposits including EMD shall deemed to be forfeited without any further notice. However, extension of further reasonable period for making payment of balance 75% may be allowed and shall be at the sole discretion of Authorized Officer.
9. The EMD amount of unsuccessful bidders will be returned without interest, after the closure of the E-auction as per process.
10. The particulars given by the Authorized officer are stated to the best of his / her knowledge, belief and records. Authorized officer shall not be responsible for any error, mis-statement or omission etc.
11. The undersigned being Authorized Officer has the absolute right and discretion to accept or reject any bid or adjourn/postpone/cancel the sale or modify any terms and conditions of the sale without any prior notice or assigning any reasons.
12. The bidders should make discreet enquiries as regards charges/encumbrances on the property and should satisfy themselves about the title, extent, quality of the property before submitting their bid. No claim of whatsoever nature regarding charges, encumbrances over the property and any other matter etc., shall be entertained after submission of the online bid.
13. Any arrears, dues, taxes, charges whether statutory or otherwise including stamp duty/registration fees on sale of property shall be borne by the purchaser only.
14. For further details, contact **Mr. Ashokkumar Manda, Authorised Officer, Mobile No. 9892294841 and Mr. Ravesh, Mobile No. 9884004069** of Unity Small Finance Bank Limited at above mentioned address.
15. The Sale Certificate will be issued post realization of entire sale proceeds and the possession of the immovable asset(s) will be delivered post 15 days thereof along with registration of sale certificate (if required any) with prior appointment and post confirmation of the Authorized Officer. Further, the sale certificate will be issued in the name of the purchaser(s) only and will not be issued in any other name(s).
16. The Borrower(s)/Guarantor(s) are hereby given Statutory Sale Notice under Rule 8 and 9 of the SARFAESI Rules, 2002 and the sale shall be subject to rules/ conditions prescribed under the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and the conditions mentioned above
17. Neither the Bank nor the Service Provider will be responsible for any network connectivity issue, system error and/or electricity problem and/or any other issues that may occur while submitting online bids/participating in the auction sale and/or if the bids are not received by the Bank due to such issues.
18. Auction Notice can be viewed on Bank's website- **https://theunitybank.com/regulatory-disclosures.html**

**THIS NOTICE WILL ALSO SERVE AS STATUTORY 15 DAYS NOTICE TO THE BORROWER/ GUARANTORS/ MORTGAGOR UNDER SARFAESI ACT AND RULES MADE THEREUNDER BEING SUBSEQUENT AUCTION / SALE.**

**Place : Tirupur, Tamil Nadu**
**Date : 2nd Sept, 2026**

**Sd/-**
**Authorised Officer**
**For Unity Small Finance Bank Limited**

★ சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் தயாரிக்க வேண்டும்
★ பிளாஸ்டிக், தெர்மாகோல் பொருட்களைப் பயன்படுத்தக்கூடாது

# சென்னையில் விநாயகர் சிலைகளை கரைக்கும் வழிமுறைகள் வெளியீடு

சென்னை, செப். 5–

**சென்னை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட்டத்தின்போது, பொதுமக்கள் விநாயகர் சிலைகளை கரைப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றி, சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட கலெக்டர் எஸ்.மாலதி ஹெலன் கேட்டுக் கொண்டுள்ளார்.**

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

''சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தொன்று தொட்டு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர் நிலைகள் (கடல், ஆறு மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும்போது, விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்கான மத்திய மாசுகட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதல்களின்படி (www.tnpcb.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது) மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பிளாஸ்டிக்கை பயன்படுத்துக் கூடாது எனவே, பொதுமக்களுக்கு கீழ்க்கண்டவாறு வேண்டுகோள் விடப்படுகிறது.

1. களிமண்ணால் செய்யப்பட்டதும் மற்றும் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் (PoP), பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் (பாலிஸ்டிரின்) கலவையற்றதுமான, சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படுகிறது.

2. சிலைகளின் ஆபரணங்கள் தயாரிப்பதற்கு உலர்ந்த மலர் கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்தப்படலாம். மேலும், சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கு மரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம்.

3. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் பொருட்களை பயன்படுத்த கூடாது. நீர் நிலைகள் மாசுபடுவதை தடுக்கும்பொருட்டு வைக்கோல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மட்டுமே சிலைகள் தயாரிக்க அல்லது சிலைகள்/ பந்தல்களை அலங்கரிக்க பயன்படுத்த வேண்டும்.

**நச்சு கலப்பற்ற இயற்கை சாயங்கள்**

4. சிலைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு நச்சு மற்றும் மக்காத ரசாயன சாயம் / எண்ணெய் வண்ணப் பூச்சுகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் மீது எனாமல் மற்றும் செயற்கை சாயத்தை அடிப்படையாக கொண்ட வண்ணப் பூச்சுகளை பயன்படுத்தக்கூடாது, மாற்றாக சுற்றுச்சூழலுக்குகந்த நீர் சார்ந்த / மக்கக்கூடிய / நச்சு கலப்பற்ற இயற்கை சாயங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

**சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில்**

5. சிலைகளை அழகுப்படுத்த வண்ணப்பூச்சுகள் மற்றும் பிற நச்சு ரசாயனங்கள் கொண்ட பொருட்களுக்கு பதிலாக, இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

6. விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகளின்படி கரைக்க வேண்டும்.

விநாயக சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் கொண்டாடும்படி பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பாக மாவட்ட கலெக்டர், காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோரை மேலும் விவரங்களுக்கு அணுகலாம். சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தமிழகத்திற்கு நீண்ட கால பாரம்பரியம் உள்ளது. விநாயகர் சதுர்த்தி, தெய்வீகத்தின் கொண்டாட்டம் மட்டுமல்ல, நமது சுற்றுச்சூழலின் அழகையும் தூய்மையையும் பாதுகாப்பதற்கான நமது உறுதிப்பாட்டை நிரூபிக்க ஒரு வாய்ப்பாகும். மேலும் மாவட்ட நிர்வாகத்தால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிவிக்கப்பட்ட இடங்களில் மட்டும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிலைகளை கரைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டசபையில் முதலமைச்சர் விஜய்யின் அறிவிப்புகளுக்கு ஜி.கே.வாசன் வரவேற்பு

சென்னை, செப்.4–

முதலமைச்சர் விஜய் சட்டசபையில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கப்படுவது குறித்து அறிவித்ததும், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை மற்றும் வழக்காடு மொழியாக அங்கீகரிக்கக் கோரி தனித் தீர்மானம் கொண்டு வந்ததும் மிகவும் இன்றியமையாதது, வரவேற்கத்தக்கது என்று ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

முதலமைச்சர் சட்டசபையில் அறிவித்த பல்வேறு அறிவிப்புகள் தமிழ்நாட்டிற்கும், தமிழகமக்களுக்கும் பெரும் பயன் தரும். தமிழகத்தில் ரூ.1,200 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த புதிய தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்ற வளாகம் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது மிகவும் இன்றியமையாதது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை மற்றும் வழக்காடு மொழியாக அங்கீகரிக்கக் கோரி தனித் தீர்மானம் கொண்டு வந்தது மகிழ்ச்சிக்குரியது.

மேலும் தமிழ்நாடு ஒலிம்பிக் நகரம், மோட்டார் ஸ்போர்ட்ஸ் நகரம் உள்ளிட்ட அறிவிப்புகள் அனைத்தும் பாராட்டத்தக்கது

முதலமைச்சர் இன்றைய காலக்கட்டத்திற்கு ஏற்ப அறிவித்திருக்கும் புதிய அறிவிப்புகளையும், திட்டங்களையும் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வரவேற்று தமிழக அரசின் முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர் நலவாரியத்தின் உறுப்பினர்கள் சேர்க்கைக்கு 15–ந் தேதி சிறப்பு முகாம்

## சென்னை கலெக்டர் தகவல்

சென்னை, செப். 5–

**தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியத்தின் உறுப்பினர்கள் சேர்க்கை சிறப்பு முகாம் 15–ந் தேதி அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளகாத்தில் உள்ள சமூக நல அலுவலகத்தில் நடைபெற உள்ளது என்று சென்னை கலெக்டர் மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கட்டுப்பாட்டில் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் மூலம் தமிழ்நாட்டில் உள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள்,

ஆதரவற்ற பெண்கள் முதிர்கன்னிகள் உள்ளிட்டோருக்கு கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சிகள் வழங்குதல் போன்ற தேவையான திட்டங்களை வகுத்து, சமூகத்தில் பாதுகாப்புடன் சிறப்பான முறையில் வாழ்வதற்கு தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம், அமைக்கப்பட்டு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நலவாரியத்தின் உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகம், 8வது தளத்தில் உள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் 15–ந் தேதி அன்று காலை 11 மணி முதல் மாலை 5.45 மணி வரை முகாம் நடைபெறவுள்ளது.

எனவே, இச்சிறப்பு முகாமில் உறுப்பினர் பதிவுக்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை, விதவைச்சான்றிதழ், புகைக்படம், கைபேசி எண் ஆகிய விவரங்களுடன் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# லஞ்ச ஒழிப்பு போலீஸ் சோதனை...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். இதுபோன்று திருச்சி தில்லை நகரில் உள்ள கே.என். நேரு வீடு மற்றும் அவருக்கு சொந்தமான இடங்களில் நான்கு வாகனங்களில் வந்த லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை தொடர்பான தகவல் அறிந்து தில்லை நகர் வீட்டிற்கு கே.என். நேரு வந்தார். முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் உள்ளிட்ட தி.மு.க.வினர், கே.என். நேருவின் இல்லம் முன்பு குவிந்துள்ளதால் பரபரப்பு நிலவியது.

சட்டவிரோதமாக பல்வேறு நிறுவனங்களில் கட்சி நிதி (பார்ட்டி ஃபண்ட்) கேட்டு மிரட்டி வசூல் செய்ததாக வந்த குற்றச்சாட்டின் பேரில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், திமுக ஆட்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சராக இருந்த கே. என். நேரு, நகராட்சி நிர்வாகத்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ரூ.800 கோடிக்கு மேல் மோசடி நடைபெற்றதாக வழக்கு மற்றும் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் டெண்டர் முறைகேடு தொடர்பான வழக்குகளில் சோதனை நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. எந்த வழக்கில் சோதனை நடைபெற்று வருகிறது என்ற அதிகாரப்பூர்வ தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

ஏற்கனவே கே.என்.நேரு மற்றும் அவரது சகோதரர் ரவிச்சந்திரன் தொடர்புடைய இடங்களில் வருமான வரித்துறை மற்றும் அமலாக்கத்துறை அதிகாரிகள் டெண்டர் முறைகேடுகள் தொடர்பாகச் சோதனை நடத்தியிருந்த நிலையில், தற்போது லஞ்ச ஒழிப்புத்துறை இந்தச் சோதனையை மேற்கொண்டுள்ளது. சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடந்து வரும் நிலையில் திமுக முன்னாள் அமைச்சரும் தற்போதைய எதிர்க்கட்சி துணைத் தலைவருமான கே.என். நேரு வீடுகளில் நடந்து வரும் அதிரடி சோதனை தமிழ்நாடு அரசியல் களத்தில் கவனம் பெற்றுள்ளது.

# நேரு வீட்டில் நடைபெறும் சோதனை பழிவாங்கும் நடவடிக்கை இல்லை: அமைச்சர் நிர்மல்குமார் பேட்டி

## வரும் தேர்தல்களில் அ.தி.மு.க. – தி.மு.க. கூட்டணி அமைய வாய்ப்பு

மதுரை, செப். 5–

**தமிழகத்தில் மக்களுக்கு பாதுகாப்பு உள்ளது; ஊழல் வாதிகளுக்குத் தான் பாதுகாப்பு கிடையாது என அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்தார்.**

மதுரையில் நிருபர்களிடம் அமைச்சர் நிர்மல்குமார் கூறியதாவது:

பிரதமர் வேட்பாளர் பற்றி பேசுவதற்கு இன்னும் காலம் உள்ளது. இது குறித்து யாரும் பேசவே இல்லை. தவெக–காங்கிரஸ் இடையே எந்த முரண்பாடும் கிடையாது. 'பிரதமர் விஜய்' என்பது ஊடகங்களில் பரப்பப்படும் தகவல் மட்டுமே. நமது அரசு மக்களுக்கான அரசு. எப்பொழுது மக்களுக்கு செய்ய வேண்டுமோ, அந்த நேரத்தில் சரியாக செய்வோம்.

தமிழகத்தில் மக்களுக்கு பாதுகாப்பு உள்ளது; ஊழல் வாதிகளுக்கு தான் பாதுகாப்பு இல்லை. திங்கள்கிழமை சட்டசபையில் முதல்வர் பதிலுக்கு பிறகு 2 மானிய கோரிக்கை நிறைவேற்றப்படும். ஒவ்வொரு நாளும் சட்டசபை 7 மணி நேரம், 8 மணி நேரம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. சட்டசபையில் அனைவருக்கும் பேச சரி சமமான வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

**அ.தி.மு.க. – தி.மு.க. ஒரே கூட்டணி**

கோவில் விஷயத்தில் எங்களுடைய தலையீடு இல்லை; முந்தைய அரசு செய்த எந்த தவறையும் நாங்கள் செய்ய மாட்டோம். முன்னாள் அமைச்சர் நேரு வீட்டில் நடந்து வரும் லஞ்ச ஒழிப்புத்துறை ரெய்டு பழிவாங்கும் நடவடிக்கை இல்லை, ஆதாரங்கள் மற்றும் புகாரின் அடிப்படையில் தான் ரெய்டு நடக்கிறது.

சோதனை குறித்து லஞ்ச ஒழிப்புத்துறை தெரிவிப்பார்கள்.

வரும் தேர்தலில் அ.தி.மு.க, தி.மு.க. ஒரே கூட்டணியில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. யார் யாருடன் சேர்ந்தாலும் எங்கள் ஆட்சியை எதுவும் செய்ய முடியாது.

இவ்வாறு அமைச்சர் நிர்மல்குமார் கூறினார்.



ஆற்காட்டில் தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பில் 3 நாட்கள் நடைபெற்ற காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி நிறைவு விழாவில் கலெக்டர் ப்ரியா ரவிச்சந்திரன் பயிற்சியில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்களை வழங்கினார். முதன்மைக் கல்வி அலுவலர் ம.மோகனா, மாவட்ட வன அலுவலர் கே.சிவக்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் பூ.தேவி, இராணிப்பேட்டை வனச்சரக அலுவலர் சரவணபாபு, பசுமை தோழர் ஆரிஃபா, காலநிலை மாற்றத்துறை எழில் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


## ஹேமாங் ரிசோர்சஸ் லிமிடெட்

CIN : L65922TN1993PLC101885

பதிவு அலுவலகம் : ப்ளாட் 69, இரண்டாவது தளம், பாய்யா காம்ளக்ஸ், புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 007.Tel.: 044-45590053, 0731-4285339, Fax: 044-45590057

இமெயில் : cs@bhatiacoalindia.com இணையதளம் : http://bhatiacoalindia.com/biil/index.htm

**33-வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் தொலைதூர மின்னணு-வாக்களிப்பு தகவல்**

நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் ("செபி") (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015-ன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி வெளியிட்ட மே 12, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79, ஜனவரி 15, 2021 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11, மே 13, 2022 மற்றும் 5, ஜனவரி, 2023 தேதியிட்ட SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 (ஒட்டுத்தமாக "சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்ட அழைப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகத்தை பரிவர்த்தனை செய்ய ஹேமாங் ரிசோர்சஸ் லிமிடெட்டின் உறுப்பினர்களுக்கான **33-வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) செவ்வாய் கிழமை, 29, செப்டம்பர், 2026 அன்று இந்திய நேரப்படி மதியம் 12.00 மணிக்கு** நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் காணோலி காட்சி (VC) மற்றும் இதர ஒலி ஒளி சாதனங்கள் மூலம் (OAVM) வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியும்.

சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனம் / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் பதிவுசெய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் 05 செப்டம்பர், 2026 அன்று மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்பட்டது. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல் நிறுவனத்தின் இணையதளமான **https://www.bhatiacoalindia.com/BIIL/Document/Annual_Notices/Notice_of_AGM_2026.pdf** ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் **www.bseindia.com** மற்றும் சென்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட்டின் **www.evotingindia.com**. -ல் கிடைக்கும்.

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 108-ன் விதிகள் மற்றும் நிறுவனங்கள் மேலாண்மை மற்றும் நிர்வாக விதிகள் 2014-ன் விதி 20, திருத்தப்பட்டது மற்றும் செபியின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள் ) ஒழுங்குமுறைகள், 2015-ன் 44வது ஒழுங்குமுறை மற்றும் பொதுக் கூட்டங்களில் (SS-2) செயலகத் தரநிலையின் விதி 8, 4 (c) ஆகியவற்றுக்கு இணங்க நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு மின்னணு-வாக்களிப்பு மூலம் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதறக்ன வசதியை வழங்குகிறது.

தொலைதூர மின்னணு-வாக்களிப்பு **சனிக்கிழமை 26, செப்டம்பர், 2026 அன்று இந்திய நேரப்படி காலை 10.00 மணிக்கு துவங்கி, திங்கட்கிழமை 28, செப்டம்பர், 2025 அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது.** குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு மேல் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது. கட் ஆஃப் தேதியின்படி உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பயனாளி உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள நபர் மட்டுமே, கூட்டத்தில் வாக்களிப்பதற்கும் மின்னணு வாக்களிக்கும் வசதியைப பெறுவதற்கு உரிமையுண்டு. அறிவிப்பை அனுப்பிய பிறகு, ஆனால் கட்ஆஃப் தேதி அதாவது செவ்வாய் கிழமை, 22 செப்டம்பர், 2026 அன்று அல்லது அதற்கு முன் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்கும் எவரும் www.evotingindia.com-ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம்.

பயனர் ஐடி மற்றும் கடவுச்சொலைப் பெறுவதற்கான விரிவான செயல்முறை கூட்டத்தின் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இது நிறுவனத்தின் இணையதளம் மற்றும் CDSL இணையதளத்தில் உள்து. ஒரு நபர் ஏற்கனவே CDSL -ல் பதிவு செய்திருந்தால் ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

கூடுதலாக, CDSL இணையதளமான www.evotingindia.com மூலம் மின்னணு வாக்களிப்பு வசதி மூலம் வாக்களிக்காமல் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது காணோலி காட்சி (VC) மற்றும் இதர ஒலி ஒளி சாதனங்கள் மூலம் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பங்கேற்று வாக்களிக்கும் வசதியும் வழங்கப்படும்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான கேள்விகள் / குறைகள் இருந்தால், அது குறித்து உறுப்பினர்கள் www.evotingindia.com -ல் கிடைக்கும் உறுப்பினருக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு (FAQs) மற்றும் உறுப்பினர்களுக்கான மின்னணு-வாக்களிப்பு பயனர் கையேடு ஆகியவற்றைப் பார்க்கவும் அல்லது www.evotingindia.com -க்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது Ms. கோமல் ஜிதேந்திரா தாக்கர் - முழு நேர இயக்குனர், தொலைபேசி எண். 0731-4200200, மின்னஞ்சல் : cs@bhatiacoalindia.com -ல் தொடர்பு கொள்ளலாம்.

இயக்குனர்கள் குழுவின் உத்தரவின்படி
**ஹேமாங் ரிசோர்சஸ் லிமிடெடிற்காக**
ஒப்பம்/-
**கோமல் ஜிதேந்திரா தாக்கர்**
முழுநேர இயக்குனர்

இடம் : சென்னை
நாள் : 05.09.2026



## காணவில்லை



மேலே புகைப்படத்தில் காணப்படும் எனது கணவர் திரு. ரவி த/பெ. கோபால் ராவ் கிராமணி, ஆண், வயது 52 என்பவர் எண். 941/M.E.B. Quarters என்ற முகவரியில் வசித்து வந்தபோது 10.12.2017 அன்று காணாமல் போய்விட்டார். இது சம்பந்தமாக K1 செம்பியம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு K1 செம்பியம் காவல் நிலைய குற்ற எண்.1238/2018 U/s Man Missing வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டது. காணாமல் போன எனது கணவர் திரு. ரவி என்பவரைத் தேடி விசாரணை செய்தும், பெரம்பூர் ரயில் நிலையம், கோயம்பேடு பேருந்து நிலையம், சென்ட்ரல் ரயில் நிலையம் ஆகிய இடங்களில் தனிப்படை வைத்து தேடப்பட்டும் அவரை பற்றிய எந்த தகவலும் கிடைக்கப் பெறாததால் காணாமல் போன எனது கணவர் திரு. ரவியை கண்டுபிடிக்க முடியவில்லை (NON Treacable) என K1 செம்பியம் காவல் நிலையத்தால் 6.12.2025 அன்று சான்றளிக்கப்பட்டது. எனவே எனது கணவர் திரு. ரவி அவர்களை கண்டாலோ அல்லது அவரைப் பற்றிய தகவல் தெரிந்தாலோ எனக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மனைவி R.கிருஷ்ணவேணி,**
**மகள்கள் R.கவிதா, S.கீதா**
**முகவரி : எண்.24/1, F4 முதல் தளம், சீனிவாசா சாலை, மயிலாப்பூர், சென்னை – 600 004. செல் : 7358415589**



## பெயர் மாற்றம்

எனது மகன், OLD SUR NAME: ASHOK SUNIL GAVASKAR, OLD GIVEN NAME : ADITI GAVASKAR, பிறந்த தேதி : 28.09.2009, முகவரி : No.704, E–Tower, The Metro Zone, No.44, Pillayar Koil Street, Anna Ngar, Chennai – 600040, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **NEW SUR NAME: GAVASKAR, NEW GIVEN NAME :ADITI** என்று அழைக்கப்படுகிறார்.

தந்தை
**ASHOK SUNIL GAVASKAR**
**KUMARESAN GNANA**

## பெயர் மாற்றம்

OLD NAME : ADITHYA D, தந்தை பெயர்: DELIPKUMAR, பிறந்த தேதி : 16.06.2007, முகவரி : No.1207/13A, Pandiyan Nagar, Kallal, Karaikudi Taluk, Sivaganga District – 630305, Tamil Nadu, India, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NEW NAME: D VIKRAMADITHYA** என்று அழைக்கப்படுகிறேன்.

**OLD NAME: ADITHYA D**

## பெயர் மாற்றம்

OLD NAME : BALAMOUROUGAN GOPALAN, தந்தை பெயர்: GOPAL, பிறந்த தேதி : 10.08.1976, முகவரி : No.97/4, Block A, Flat 5, First Floor, Sri Chanakya Appartments, Sithankudi, Puducherry – 605013, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NEW NAME: BALAMURUGAN GOPAL** என்று அழைக்கப்படுகிறேன்.

**OLD NAME: BALAMOUROUGAN GOPALAN**

## பெயர் மாற்றம்

OLD SUR NAME : KAPASI, OLD GIVEN NAME : FATEMA SABBIR, கணவர் பெயர்: MURTAZA MADRASWALA, பிறந்த தேதி : 09.11.2000, பிறந்த ஊர் : Jamnagar, Gujarat, முகவரி : N.No.22, O.No.82, Amatullah Manzil 2A, 2nd Floor, West Mada Church Street, Royapuram, Chennai – 600013, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NEW SUR NAME: MADRASWALA, NEW GIVEN NAME : FATEMA** என்று அழைக்கப்படுகிறேன்.

**OLD SUR NAME: KAPASI**
**OLD GIVEN NAME : FATEMA SABBIR**



## அறிவிப்பு

## விர்கோ பாலிமர்ஸ் இந்தியா லிமிடெட்

**பதிவு அலுவலகம்: A1A MMDA தொழிற்பேட்டை, மறைமலை நகர், காஞ்சிபுரம், சென்னை, தமிழ்நாடு: 603209**

இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 6 நவம்பர் 2018 தேதியிட்ட செபி (SEBI) சுற்றறிக்கை SEBI/HO/MIRSD/DOS3/CIR/P/2018/139–ன் படி, இந்தியாவின் கர்நாடக மாநிலம் பெங்களூரில் வசிப்பவரும், சர்வே எண் 23, பன்னேருகட்டா சாலை, கொல்லஹள்ளி கிராமம், ஜிகானி ஆனேக்கல் தாலுகா, பன்னேருகட்டா, பெங்களூரு, கர்நாடகா– 560083 என்ற நிரந்தர முகவரியைக் கொண்டவருமான திரு. பாசுதேவ் ராம்சிசாரியாவின் மகனான திரு. சந்திர பிரகாஷ் ராம்சிசாரியாவிடமிருந்து, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பாதுகாப்புதாரரின்(களின்) பெயரில்(களில்) உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பத்திரங்களை தனது பெயருக்கு மாற்றுமாறு நிறுவனத்திற்கு ஒரு கோரிக்கை வந்துள்ளது. இந்தப் பங்கு பத்திரங்கள் அவரால் வாங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளதுடன், அவற்றை அவர் பெயருக்கு மாற்ற இயலவில்லை.

| போலியோ எண் | பெயர் | முகவரி | CN முதல | DN வரை | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| S00003 | சத்தீஷ் குமார் J | சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, PIN | 1429-1438 | 000800001-00081000 | 1000 |
| K00001 | கமல்ராஜ் D | எம்.கே.பி.நகர், சென்னை, PIN | 361-365 | 00120101-00120600 | 500 |
| K00001 | கமல்ராஜ் D | எம்.கே.பி.நகர், சென்னை, PIN | 811-820 | 00085901-00086900 | 1000 |
| K00001 | கமல்ராஜ் D | எம்.கே.பி.நகர், சென்னை, PIN | 1885-1889 | 0176401-0176900 | 500 |
| K00002 | கவிதா D | எம்.கே.பி.நகர், சென்னை, PIN | 821-837 | 00082501-00084200 | 1700 |
| K00002 | கவிதா D | எம்.கே.பி.நகர், சென்னை, PIN | 1875-1884 | 0175401-0176400 | 1000 |
| K000000501 | கேஷ்மா சுந்தரி | | 00030769-00030778 | 0001454801-0001455800 | 1000 |
| V00002 | விஜயமதி J | சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, PIN | 0001488-0001497 | 00079001-00080000 | 1000 |
| V00002 | விஜயமதி J | சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, PIN | 0004811-0004817 | 0469001-0469700 | 700 |
| R00002 | ராஜ்குமாரி A | 14வது கிழக்கு குறுக்கு தெரு, சென்னை, PIN PIN | 0001162-0001166 | 00090901-00091400 | 500 |
| R00002 | ராஜ்குமாரி A | 14வது செக்டார், கே.கே. நகர், சென்னை, PIN | 0004801-0004810 | 0468001-0469000 | 1000 |
| R00013 | ராஜ்குமாரி A | 14வது செக்டார், கே.கே. நகர், சென்னை, PIN | 0005453-0005482 | 0533201-0536200 | 3000 |
| R000000501 | ராஜ்குமாரி A | 14வது செக்டார், கே.கே. நகர், சென்னை, PIN | 00028598-00028622 | 0001237701-0001240200 | 2500 |
| R000000501 | ராஜ்குமாரி A | 14வது செக்டார், கே.கே. நகர், சென்னை, PIN | 00031863-00031896 | 0001564201-0001567600 | 3400 |
| 0000001456 | கிஷோர் P ஜெயின் | | 00023234-00023237 | 0003275101-0003275500 | 400 |
| U00007 | உஷா J | சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, PIN | 0007078-0007104 | 0695701-0698400 | 2700 |
| U000000501 | உஷா J | | 00032475-00032484 | 0001625401-0001626400 | 1000 |
| | | | | | **22900** |

மேற்கூறிய பத்திரங்கள் தொடர்பாக உரிமை கோரும் நபர் எவரேனும் இருந்தால், அதற்கான தகுந்த ஆவண ஆதாரங்களுடன் இந்தத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் அத்தகைய உரிமைகோரலைச் சமர்ப்பிக்க வேண்டும், இல்லையெனில், நிறுவனம் வேறு எந்த முன்னறிவிப்பும் இன்றி, திரு. சந்திர பிரகாஷ் ராம்சிசாரியாவுக்குப் பங்கு பத்திரங்களை மாற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தொடரும்.

**இடம் : சென்னை, தேதி: 05.09.2026** **விர்கோ பாலிமர்ஸ் இந்தியா லிமிடெட்**



## ஐபவர் சொலூஷன்ஸ் இந்தியா லிமிடெட்

பதிவு அலுவலகம் : புதிய எண்.17, பழைய எண்.7/4, வைகை தெரு, பெசன்ட் நகர், சென்னை 600 090, தமிழ்நாடு, இந்தியா – 600090

CIN: L72200TN2001PLC047456 | Email: audit@ipwrs.com | Website: www.ipwrs.com

**41வது வருடாந்திர பொதுக் கூட்டம் – மின்னணு–வாக்களிப்பு மற்றும் புத்தகம் மூடல் தேதிகள் குறித்த பொது அறிவிப்பு**

ஐ பவர் சொலூஷன்ஸ் இந்தியா லிமிடெட் ("நிறுவனம்") உறுப்பினர்களின் 41–வது வருடாந்திர பொதுக் குழு கூட்டம் (AGM), 28 ஆகஸ்ட் 2026 தேதியிட்ட AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு வணிகங்களை மேற்கொள்வதற்காக, 28 செப்டம்பர் 2026, திங்கட்கிழமை காலை 11:30 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி ("VC") / பிற ஆடியோ–காட்சி வழி முறைகள் ("OAVM") மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் விதிமுறைகள், செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ("பட்டியலிடல் விதிமுறைகள்"), பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் ("MCA") செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 3/2025 மற்றும் MCA மற்றும் SEBI அவ்வப்போது வெளியிடும் பிற பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என்று அழைக்கப்படுகிறது) ஆகியவற்றுக்கு இணங்க, AGM நடைபெறும் இடத்தில் உறுப்பினர்கள் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. உறுப்பினர்கள் 41–வது AGM–இல் VC/OAVM மூலமாகப் பங்கேற்கலாம், மேலும் இது சட்டத்தின் 103–வது பிரிவின் கீழ் உறுப்பினர்களின் குறைந்தபட்ச பங்கேற்பு கணக்கிடும் நோக்கத்திற்காகக் கருதப்படும்.

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 41–வது AGM அறிவிப்பு மற்றும் 2025–2026 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை ஆகியவற்றின் மின்னணு நகல்கள்/இணைய இணைப்புகள், நிறுவனம்/டெபாசிட்டரி பார்ட்டிசிபண்ட்கள்/RTA–விடம் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளன. கூடுதலாக, பட்டியலிடல் விதிமுறைகளின் 36(1)(b) விதிமுறைப்படி, நிறுவனம், டெபாசிட்டரிகள் அல்லது பதிவாளர் மற்றும் பங்குப் பரிமாற்ற முகவர் (RTA) ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு, வருடாந்திர அறிக்கை மற்றும் AGM அறிவிப்பை அணுகுவதற்கான இணைய இணைப்பு மற்றும் சரியான பாதையைக் கொண்ட கடிதம் அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது.

41–வது AGM–ன் அறிவிப்பு மற்றும் 2025–2026 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையை கீழ்க்கண்ட இணையதளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்:

- **நிறுவனத்தின் இணையதளம்:** www.ipwrs.com
- **பங்குச் சந்தை இணையதளம்:** https://www.bseindia.com/
- **மின்னணு வாக்குப்பதிவு இணையதளம் (CDSL):** https://www.evotingindia.com

டிமேட்டீரியலைஸ் (dematerialized) முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்களை அந்தந்த டெபாசிட்டரி பார்ட்டிசிபண்ட்களிடம் (DPs) பதிவு செய்ய/புதுப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காகித (physical) வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், கையொப்பமிடப்பட்ட கோரிக்கை கடிதத்துடன், சுய–சான்றளிக்கப்பட்ட பங்குச் சான்றிதழ்(களின்) நகல்கள் மற்றும் சுய–சான்றளிக்கப்பட்ட பான் கார்டு அல்லது மறைக்கப்பட்ட அடையாளச் சான்று ஆகியவற்றை cameo@cameoindia.com என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் நிறுவனத்தின் RTA ஆன M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்–இடம் தங்களது விவரங்களைப் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சட்டத்தின் பிரிவு 91 மற்றும் பட்டியலிடல் விதிமுறைகளின் 42–வது விதிமுறைப்படி, 41–வது AGM நோக்கத்திற்காக, நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்குப் பரிமாற்றப் புத்தகங்கள் 22 செப்டம்பர் 2026, செவ்வாய்க்கிழமை முதல் 28 செப்டம்பர் 2026, திங்கட்கிழமை வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014–ன் விதி 20 உடன் சட்டத்தின் 108–வது பிரிவுக்கு இணங்கவும், மற்றும் பட்டியலிடல் விதிமுறைகளின் 44–வது விதிமுறைப்படியும், நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) மூலம் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் AGM–இன் போது மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்குகிறது.

**முக்கிய மின்னணு வாக்குப்பதிவு விவரங்கள் & காலக்கெடு:**

- **கட்– ஆஃப் தேதி:** 21 செப்டம்பர் 2026, திங்கட்கிழமை (வாக்களிக்கும் தகுதியைத் தீர்மானிக்க).
- **தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடக்கம்:** 25 செப்டம்பர் 2026, வெள்ளிக்கிழமை காலை 09:00 மணிக்கு (இந்திய நேரப்படி).
- **தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடிவு:** 27 செப்டம்பர் 2026, ஞாயிற்றுக்கிழமை மாலை 05:00 மணிக்கு (இந்திய நேரப்படி).

இதன்பிறகு CDSL மூலம் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொகுதி முடக்கப்படும். ஒரு தீர்மானத்தின் மீது வாக்கு பதிவு செய்யப்பட்டவுடன், உறுப்பினர் அதை பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

VC/OAVM மூலம் AGM–இல் கலந்துகொள்ளும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள், AGM–இன் போது CDSL வழங்கும் மின்னணு வாக்குப்பதிவு அமைப்பின் மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

AGM–க்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் AGM–இல் பங்கேற்கலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஒரு உறுப்பினர் இரண்டு முறைகளிலும் வாக்களித்தால், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் செலுத்தப்பட்ட வாக்கே கணக்கில் கொள்ளப்படும், மேலும் AGM–ன்போது செலுத்தப்பட்ட வாக்கு செல்லாததாகக் கருதப்படும்.

அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று உறுப்பினராகி, கட்–ஆப் தேதியான (21 செப்டம்பர் 2026, திங்கட்கிழமை) அன்று பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியோ அல்லது helpdesk.evoting@cdslindia.com அல்லது cameo@cameoindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பியோ பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், ஒரு நபர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே CDSL–இல் பதிவு செய்திருந்தால், தற்போதைய பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லையே பயன்படுத்தலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் AGM–ன்போது நடைபெறும் மின்னணு வாக்குப்பதிவு செயல்முறைகளை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் கண்காணிப்பதற்காக, சென்னை, M/s. லட்சுமி சுப்பிரமணியன் & அசோசியேட்ஸ் (Practising Company Secretaries) நிறுவனத்தை கண்காணிப்பாளராக (Scrutinizer) இயக்குநர் குழு நியமித்துள்ளது.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது VC/OAVM மூலம் AGM–இல் கலந்துகொள்வது தொடர்பான ஏதேனும் சந்தேகங்கள் அல்லது குறைகள் இருந்தால், உறுப்பினர்கள் பின்வரும் முகவரியைத் தொடர்பு கொள்ளலாம்:

CDSL உதவி மையம் (Helpdesk): திரு. ராகேஷ் தால்வி, உதவித் துணைத் தலைவர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், A–விங், 25–வது தளம், மராத்தான் ஃபியூச்சரெக்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், N M ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013.

மின்னஞ்சல்: helpdesk.evoting@cdslindia.com | கட்டணமில்லா தொலைபேசி: 1800 21 09911.

**குழு உத்தரவின்படி**
**ஐ– பவர் சொலூஷன்ஸ் இந்தியா லிமிடெட்டிற்காக**
**ஒப்பம்/––**
**ராஜேந்திர நானிவடேகர்**
**நிர்வாக இயக்குநர்**
**DIN: 00032107**

**இடம்: சென்னை**
**நாள் : 05 செப்டம்பர் 2026**